**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.27.11.2025**

**O.S. No. 20/2016**

**பி.வா.சா. 1- நவநீதகிருஷ்ணன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு தபசில் சொத்தை நான் பார்த்து எவ்வளவு நாள் இருக்கும் என்றால் அடிக்கடி பார்த்துக் கொண்டு தான் இருப்பேன். வழக்கு தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றப்பட்டு முள் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றப்பட்டு முள் வேலி என்னால் அமைக்கப்படவில்லை என்றால் சரியல்ல சொத்தை வாங்கிய பிறகு, நானும் எனக்கு கிரையம் கொடுத்தவரும் சேர்ந்து வழக்கு தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றி முள் வேலி அமைத்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் இருப்பது தபசில் சொத்து என்றால் புகைப்படம் சரியாக எனக்குத் அடையாளம் தெரியவில்லை. வழக்குச் சொத்தில் ஒரு பெட்டிக்கடை உள்ளது என்றால் தகரப்பெட்டி உள்ளது அதை நான் தான் அமைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் இருப்பது வழக்குச் சொத்தில் உள்ள தகரப்பெட்டி என்றால் சரியல்ல. எனது எதிர்கோரிக்கையில் தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றி முள் வேலி அமைத்ததையோ மற்றும் வழக்குச் சொத்தில் உள்ள தகரப்பெட்டி பற்றியோ சொல்லவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றி முள் வேலி அமைத்தது எப்போது என்றால் நான் கிரையம் வாங்கி 6 மாதம் கழித்து நானும் எனக்கு கிரையம் கொடுத்தவரும் அமைத்தோம். நான் கிரையம் வாங்கி 6 மாதம் கழித்து நானும் எனக்கு கிரையம் கொடுத்தவரும் தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றி முள் வேலி அமைக்கவில்லை மற்றும் தகரப்பெட்டி அமைக்கவில்லை அதனால் தான் எனது எதிர்கோரிக்கையில் மேற்படி விபரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதி பெயருக்கு கூட்டுப் பட்டா உள்ளது என்றால் சரிதான் அது போலியானது. வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதி பெயருக்கு கூட்டுப் பட்டா ஏற்பட்டதை எதிர்த்து நானும் எனக்கு கிரையம் கொடுத்தவரும் மனு கொடுத்துள்ளோமா என்றால் RDO, தாசில்தார், VAO விடம் மனு கொடுத்துள்ளோம். RDO, தாசில்தார், VAO விடம் மனு கொடுத்தது எந்த ஆண்டு மாதம் தேதி என்றால் நான் தான் மனு கொடுத்தேன் நான் கிரையம் வாங்கி 6 மாதம் கழித்து கொடுத்தேன் நாள் தேதி ஞாபகமில்லை. RDO, தாசில்தார், VAO விடம் கொடுத்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். RDO, தாசில்தார், VAO விடம் நான் மனு கொடுக்கவில்லை அதனால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல மனு கொடுத்தேன். என் பெருக்கு இதுநாள்வரை அரசால் வருவாய் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்றால் வழக்கு நடப்பதால் அரசால் வருவாய் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை. வழக்கு நடப்பதால் அரசால் வருவாய் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்பதற்கு எழுத்துமூலமான உத்தரவு உண்டா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னார்கள். நான் தாவா சொத்தை உண்மையான உரிமையாளரிடம் இருந்து சொத்தினை வாங்காததால் என் பெருக்கு இதுநாள்வரை அரசால் வருவாய் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை, வழக்கிற்காக பொய்யாக வழக்கு நடப்பதால் அரசால் வருவாய் ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த வா.சா.2 கணேசன் நான் கிரையம் பெற்ற கணபதி என்பவரின் உடன்பிறந்த சகோதரர் மகன் என்றால் சரிதான். மேற்படி கணேசன் அவரது பெரியம்மா கருப்பாயியிடமிருந்து சொத்தினை வாங்கி வாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் போலியான ஆவணம். மேற்படி கணேசன் அவரது பெரியம்மா கருப்பாயியிடமிருந்து சொத்தினை வாங்கிய விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2014 ல் ஒருதலைபட்ச தீர்ப்பு பெற்றிருந்தார்கள் அதன் பிறகு தான் எனக்கு தெரியவந்தது.

நான் சொல்லக்கூடிய ஒருதலைபட்ச தீர்ப்பு பற்றி படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம் படித்துப் பார்த்தேன் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அதை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரா இல்லையா என எனக்குத் தெரியாது. மேற்படி கணேசன் அவரது பெரியம்மா கருப்பாயியிடமிருந்து சொத்தினை வாங்கிய கிரைய ஆவணத்திற்கு எதிராக நானோ, எனது முன்பாத்தியஸ்தரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் கணேசன் அவரது பெரியம்மா கருப்பாயி என்பதற்கு எந்த ஆவணத்தையும் அவர் கொடுக்கவில்லை. மேற்சொன்ன காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்பாயி அம்மாள் யாருடைய மகள் என்றால் தெரியாது. நான் எனது எதிர்கோரிக்கை மாடத்தி மகள் கருப்பாயி என சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. எனது முன்பாத்தியஸ்தர் மாடத்தி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சொத்து மாடத்தி வகையறாவுக்குப் பாத்தியப்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மாடத்திக்கு எத்தனை ஆண் மக்கள், எத்தனை பெண் மக்கள் என்றால் 2 ஆண் மக்கள் கணபதி, கசமுத்து, பெண் மக்கள் யார் என்று எனக்குத் தெரியாது. மாடத்திக்கு உடையம்மாள், பால் உடையார், பூரணம் ஆகிய 3 பெண் மக்கள் உண்டு என்பதை மறுக்க முடியுமா என்றால் தெரியாது. மாடத்தியின் 2 ஆண் மக்கள் சொத்துக்களை பிரித்துக்கொண்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும். மாடத்தியின் 2 ஆண் மக்கள் வழக்குச் சொத்துக்களை மற்றும் இதர சொத்துக்களை எப்படிப் பிரித்துக் கொண்டார்கள் என்றால் கசமுத்துவுக்கு மேல்பகுதியும், கணபதிக்கு கீழ்பகுதியும் பிரித்துக்கொண்டார்கள். மாடத்தியின் 2 ஆண் மக்கள் மேற்படி கசமுத்து மற்றும் கணபதி என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை என்றால் சாட்சி தற்போது மாடத்தியின் மகன் பாலாறு, பாலாறின் மகன் தான் கசமுத்து மற்றும் கணபதி. பாலாறு உடன்பிறந்தவர்கள் யார் என்றால் 3 பேர் ஆண்டி, கசமுத்து மற்றவரைப் பற்றி சரியாகத் தெரியாது.

ஆண்டி, கசமுத்து, பாலாறு வழக்குச் சொத்துக்களை மற்றும் இதர சொத்துக்களை எப்படிப் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. மாடத்தி அம்மாளுக்கு எத்தனை பெண் மக்கள், எத்தனை ஆண் மக்கள் என்பது பற்றியும் அவர்கள் வழக்குச் சொத்துக்களை மற்றும் இதர சொத்துக்களை எப்படிப் பிரித்துக்கொண்டார்கள் என்பது பற்றியும் எனக்கு கிரையம் கொடுத்த கணபதியை விசாரித்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் எனக்கு சொத்தை எழுதிக்கொடுத்த பிறகு கணபதி வாதியுடன் சேர்ந்து கொண்டுவிட்டார் அதனால் அவர் சரியாக சொல்லமாட்டார். வழக்கில் எனக்கு சொத்தை எழுதிக்கொடுத்த கணபதி அவசியத்தரப்பு அவர் வந்தால் தான் உறவுமுறைப் பற்றியும் சொத்துக்களை பாகம் பிரித்தது பற்றியும் தெரியவரும் அவர் நீதிமன்றம் வந்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் அவர் சரியாக சொல்லமாட்டார் என பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அ.வ.எண்.191/2014 வழக்கில் தீர்ப்பு வாங்கியபிறகு 2016 ல் சொத்துக்களை மேம்படுத்த சென்றபோது எனக்கும் அவருக்கும் பிரச்சனை வந்து காவல்நிலையத்திற்கு முதல்முறை சென்றோம் என்றால் சரியல்ல தீர்ப்புக்கு முன்பாகவே எனக்கும் அவருக்கும் பிரச்சனை வந்துவிட்டது. எந்த வருடத்திலிருந்து வாதிக்கும் எனக்கும் சொத்து பிரச்சனை வந்தது என்றால் 2013 ல் கிரையம் வாங்கி நான் அனுபவித்து வருகிறேன் 2016 ல் நீதிமன்ற தீர்ப்பு வந்தபிறகு வாதிக்கும் எனக்கும் சொத்து பிரச்சனை வந்தது. தற்போதும் வாதிக்கும் எனக்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சொத்து எனக்கு தான் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதிக்கும் எனக்கும் உரிமை மூல பிரச்சனை உள்ளது அதனால் விளம்புகைப் பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டும் கேட்டுள்ளது சட்டப்படி சரியானது என்றால் சரியல்ல. வாதி கிரையம் வாங்கிய விபரம் எனக்கு 2013 ல் தெரியுமா என்றால் வாதி சர்வே எண்.220/6 வாங்கியுள்ளார், சர்வே எண்.220/2 மற்றும் சர்வே எண்.220/5 ஐ வாங்கியுள்ளேன். வாதி சர்வே எண்.220/6 வாங்கிய விபரம் எனக்கு 2013 ல் தெரியுமா என்றால் தெரியும்.

வாதி சர்வே எண்.220/6 வாங்கிய விபரம் எனக்கு 2013 ல் தெரிந்தபிறகும் வாதி வழக்குப் போட்டு வெகு நாட்கள் கழித்து பரிகாரம் கேட்டிருப்பதால் எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது எதிர்கோரிக்கையில் வழக்குச் சொத்து அதனுடன் சேர்ந்த சொத்து ஆவண விபரத்தில் 11.02.1930 ல் மாடத்தி பெயரிலான கிரைய ஆவணத்தின் மூலமாகப் பாத்தியப்பட்டதாக சொல்லி உள்ளேன், எனது எதிர்கோரிக்கையில் 6 வது பக்கத்தில் 11.02.1934 தேதியில் கிரைய ஆவணம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் இரண்டும் வேறு வேறு ஆவணங்கள். நான் சொல்லிய இரண்டு ஆவணங்களையும் ஒரே நோக்கத்தில் தான் சொல்லி உள்ளேன், தற்போது வழக்கிற்காக இரண்டும் வேறு வேறு ஆவணங்கள் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாடத்திக்கு 11.02.1930 தேதிய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டதா, 11.02.1934 தேதிய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டதா என்றால் ஆவணத்தைப் பார்த்தால் தான் சொல்ல முடியும். மாடத்திக்கு யார் கிரையம் கொடுத்தார்கள், யார் பணம்கொடுத்தார்கள் என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் ஆவணத்தைப் பார்த்தால் தான் சொல்ல முடியும். நான் எனது எதிர்கோரிக்கையில் வழக்குச் சொத்தையும் அதனுடன் சேர்ந்த சொத்துக்களையும் மாடத்தி பெயரில் பெயர் ராசிக்காக வாங்கப்பட்டது என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் வாங்கிய சர்வே எண். 220/2 மற்றும் 220/5 சொத்து எந்தப் பக்கத்தில் உள்ளது என்றால் வாதி வாங்கிய சொத்துக்கு கீழ்பக்கத்தில் உள்ளது. வாதி பெயரில் சர்வே எண். 220/6 ஐப் பொறுத்து தீர்ப்பு வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் தற்போது சர்வே எண். 220/6 என்ன நிலையில் உள்ளது என எனக்குத் தெரியாது அதனால் அதைப் பற்றி நான் சொல்ல முடியாது. அ.வ.எண்.191/2014 வழக்கில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். அ.வ.எண்.191/2014 வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்பதாலும், இரு வழக்கிற்கும் வழக்கு மூலம் வேறு என்பதாலும் வாதிக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய தடை கிடையாது என்றால் சரியல்ல நான் சொத்தை வாங்கியுள்ளேன்.

வழக்குச் சொத்துக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றாலும் வழக்கு தபசில் சொத்தை சுற்றி 5 அடி உயரத்தில் கல் தூண்கள் ஊன்றப்பட்டு முள் வேலி அமைத்து பெட்டிக்கடை அமைத்துள்ளார் என்றாலும் மேற்படி கல் தூண்கள் ஊன்றப்பட்டு முள் வேலி அமைத்துள்ள விவரத்தை வாதி அ.வ.எண்.191/2014 வழக்கில் சொல்லி வழக்குச் சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. தபசில் சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை வாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. 2016 தீர்ப்பு க்கு பிறகு நான் வழக்குச் சொத்திற்கு செல்லவில்லை என்றால் நானும்போகவில்லை வாதியும் போகவில்லை நீதிமன்ற தீர்ப்பு இருப்பதால் காவல் துறையினர் சொத்திற்கு போகக்கூடாது என எழுதிவாங்கிவிட்டார்கள். நீதிமன்ற தீர்ப்பு இருப்பதால் காவல் துறையினர் சொத்திற்கு போகக்கூடாது என எழுதிவாங்கியதற்கு எதிராக நான் காவல் துறையினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையினர் சொத்திற்கு போகக்கூடாது என சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்தினை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1936 முதல் 1965 வரை மாடத்தி அம்மாள் யார் யாருக்கு மேட் ஓவர் செய்தார் என்ற விபரத்தை என்னால் சொல்ல முடியுமா என்றால் கடைசியாக எனக்கு கிரையம் கொடுத்த கணபதி தான் அடமானத்தை செல்லடித்து வைத்திருந்தார். வழக்குச் சொத்தினை நான் பாத்தியதை இல்லாத நபரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் வாதி அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பாத்தியதை இல்லாத நபரிடமிருந்து கெட்ட ஆதாயம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. குடும்பத்தில் உள்ள உறவுமுறையை அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் வந்து சொன்னால் தான் தெரியும் என்றால் சரிதான்.

நான் சொன்ன உறவுமுறையை நிரூபிக்கவோ, வாதி சொன்ன உறவுமுறையை பொய்ப்பிக்கவோ சொந்தக்காரர்களை விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எனது எதிர்கோரிக்கை தவறான முறையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் எனது எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு வாதியினுடைய வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு மேற்கில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறு எனக்கு எவ்வளவு பாகம் உண்டு என்றால் 1/7 ல் பாகம் உண்டு. மேற்படி கிணற்றின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.220/4. மேற்படி சர்வே எண்.220/4 கிணற்றில் சர்வே எண்.220/6 ஐ கிரையம் வாங்கிய வாதிக்கும் பங்கு உண்டு என்றால் அவருக்கு 1 பங்கு உண்டு. மேற்படி சர்வே எண்.220/4 கிணற்றில் வாதி கூட்டுப் பங்காளி என்பதால் நான் எதிர்கோரிக்கை கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.27 17:34:20 +0530